விருதுநகர் தொழில் வர்த்தக சங்க மஹாலில், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில், மாவட்ட தொழில் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம் (தாட்கோ), வாழ்ந்து காட்டுவோம் திட்டம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்டம் முன்னோடி வங்கி மற்றும் அனைத்து வங்கிகள் இணைந்து நடத்திய "கடன் வசதி எளிமையாக்கல் இயக்கம்" சிறப்பு முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து, 915 தொழில் முனைவோர்களுக்கு, ரூ.114.51 கோடி மதிப்பிலான, மானியத்துடன் கூடிய கடனுதவிக்கான அனுமதி ஆணைகள் மற்றும் காசோலைகளை வழங்கினார்.

நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள பாளையஞ்செட்டிகுளம், ரெட்டியார்பட்டியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாமை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், கிரகாம் பெல், பிரபாகரன்,தங்கபாண்டியன், போர்வெல் கணேசன், சித்திக், ஜெகதீஷ், ராஜ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

ஜனநாயகம் காப்போம்! முதல்வர் மு.க.ஸ்டாலினின் சிம்மக்குரலை

பிரதமர் நரேந்திர மோடியால் - தாங்கிக் கொள்ள முடியவில்லை!

'தினகரன்' நாளேடு தலையங்கம்

சென்னை, ஜூலை 29-

ஜனநாயகம் காப்போம் என்று குறிப்பிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி வரும் சிம்மக்குரலை பிரதமர் மோடியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ. ஆட்சியில் அனைத்து மாநிலங்களிலும் வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது. மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை பா.ஜ.வினர் திட்டமிட்டு செய்துவருகின்றனர். இதனால் இந்திய நாட்டின் ஜனநாயக கட்டமைப்பு ஆட்டம் கண்டுள்ளது. மதரீதியாக மக்களை பிரிவினைப்

தினகரன்

ஜூலை 28, 2023 வெள்ளிக்கிழமை

ஜனநாயகம் காப்போம்

நாடில் பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பாஜ ஆட்சியில் அனைத்து மாநிலங்களிலும் வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது. மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை பாஜவினர் திட்டமிட்டு செய்துவருகின்றனர். இதனால் இந்திய நாட்டின் ஜனநாயக கட்டமைப்பு ஆட்டம் கண்டுள்ளது. மதரீதியாக மக்களை பிரிவினைப் படுத்தி நாட்டையே துண்டாட பாஜ திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது. இதற்கு உதாரணமாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிவதை கண்கூடாக பார்த்து வருகிறோம். இதே நிலை அனைத்து மாநிலங்களிலும் பரவும். ஏன், தமிழ்நாட்டில் கூட பரவும். இதை விட்டுவிட்டக்கூடாது. அதற்கு முன்பு இந்தியாவை சிதைத்துவிட்ட ஒன்றிய பாஜ ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

படுத்தி நாட்டையே துண்டாட பா.ஜ. திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது. இதற்கு உதாரணமாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிவதை கண்கூடாக பார்த்து வருகிறோம். இதே நிலை அனைத்து மாநிலங்களிலும் பரவும். ஏன், தமிழ் நாட்டில் கூட பரவும். இதை விட்டுவிடக்கூடாது. அதற்கு முன்பு இந்தியாவை சிதைத்துவிட்ட ஒன்றிய பா.ஜ. ஆட்சிக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் அழைப்பு விடுத்துள் ளார்.

மதவாத பா.ஜ. ஆட் சியை அகற்ற வேண்டும் என்ற முயற்சியில் 26 கட்சி கள் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியை உருவாக்கி யுள்ளது. அடுத்த ஆண்டு மக்களவை தேர்தலில் இந்த கூட்டணி மகத்தான வெற் றியை பெற்று நாட்டின் பாதுகாப்பு, பொருளாதா ரம், ஜனநாயகம் ஆகிய வற்றை மீட்டெடுக்க வேண் டும். இதற்காக தொலை நோக்கு பார்வை கொண் டுள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை தி.மு.க. எதிர்கொள்ளும் வகையில் வாக்குச்சாவடி முகவர்களை நியமித்து அவர்களை சிறந்த முறை யில் தயார்படுத்தி வருகி றார்.

நாடாளுமன்றத் தேர்த லில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றிவாகை சூட வேண்டும் என்பதால் தமி ழக அரசின் நலத்திட்டங் களை வீடு வீடாக கொண்டு சேர்க்க வேண்டியது கட மையாகும். தமிழகத்தில் மக்கள் நலனுக்கு முக்கியத்து வம் கொடுக்கும் மகத்தான ஆட்சி நடந்து வருகிறது. இந்த ஆட்சி மீது எந்த கொம்பனாலும் குறை சொல்ல முடியாது. இத னால் பழைய வெற்றுக் காகிதங்களை பெட்டியில் எடுத்துக்கொண்டு ஆளுநர் மாளிகைக்கு சிலர் அடிக்கடி சென்று வருகிறார்கள். இந்த பூச்சாண்டிகளை பார்த்து திராவிட மாடல் அரசு பயந் துவிடாது. அமலாக்கத்து றையை ஏவி தமிழ்நாட்டு ஆட்சியில் குழப்பத்தை ஏற் படுத்திவிட முடியாது.

தி.மு.க.வை பொறுத்த வரை மக்கள் தான் முதலா ளிகள். மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அப்படியே நிறைவேற்றி தருகிறார். இத னால் மக்களுடன் வலு வான கூட்டணியில் தி.மு.க. இருக்கிறது என்பதை சகித் துக்கொள்ள முடியாதவர்கள் முடிந்தவரை சேற்றை வாரி இறைத்து ஆட்சிக்கு கெட் டப்பெயரை ஏற்படுத்த அவதூறுகளை பரப்பி வரு கிறார்கள். யார் ஆட்சியில் இருக்க கூடாது என்பதை முடிவெடுக்கும் தேர்தலாக நாடாளுமன்றத் தேர்தல் அமைய வேண்டும். இந் தியா முழுவதும் இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். ஒன்றியத்தில் மீண்டும் பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாரா லும் காப்பாற்ற முடியாது.

இந்தியாவில் ஜனநாய கமே இருக்காது. பா.ஜ. ஆட்சியை வீழ்த்த வேண் டும் என்று தமிழ்நாடு முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் சிம்மக்குரல் எடுத்து கர்ஜித்து வருவதால் பிரத மர் மோடியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, தமிழகத்தை அடிப ணிய வைக்க சதிகளையும், சூழ்ச்சிகளையும் வகுத்து ஆளுநர் மூலம் செயல்ப டுத்தி வருகிறார்கள். தமிழ் நாட்டை பா.ஜ. அரசு மற் றொரு மணிப்பூராக மாற்ற விடக்கூடாது. மக்களை வேறுபடுத்தி குளிர்காயும் பா.ஜ.வுக்கு உரிய பதில டியை நாடாளுமன்றத் தேர் தலில் கொடுத்தாக வேண் டும். இதற்காக தி.மு.க. தயாராகிவிட்டது. தமிழக மக்களும் தயாராக இருக் கின்றனர் என்ற மகிழ்ச்சி யான செய்தியை போர் படைக்கு தலைமையேற் றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. தொண்டர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழு தியுள்ளது.

கால்நடை மருத்துவ தர வரிசைப் பட்டியலில் முதலிடம்

மாணவர் ராகுல் காந்துக்கு வாழ்த்து!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை 29 -

கால்நடை இளநிலை மருத்துவ தர வரிசைப் பட்டியலில் மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவர் ராகுல் காந்த் அவர்களை வாழ்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

மாணவர் ராகுல் காந்த் அவர்களின் கல்வி மீதான ஆர்வமும் அவரது உழைப்பும் போற்றத்தக்கது; அவரை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

கல்வியின் முக்கியத்துவத்தை நான் ஒவ்வொரு முறை வலியுறுத்திப் பேசுவதும், நம்முடைய NEET எதிர்ப்பு என்பதும் ராகுல் காந்த் போன்ற மாணவர்களின் வெற்றிக்காகத்தான்!

அவருக்கு உதவ நமது அரசு இருக்கிறது. படிப்பு மட்டுமே நம்முடைய சொத்து! நிலையான புகழ்! தடைகளைக் கடந்து படிப்போம்! படிப்பால் பெருமையடைவோம்! ராகுல் காந்த்தின் பெற்றோருக்குப் பாராட்டுகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், கீழ் கோத்தகிரி, கோடநாடு கேரடாமட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் உள்ளார்.

சிவகங்கை மாவட்டம் - இடைக்காட்டூர் - புதுவயலில்

கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம் - நல உதவிகள் வழங்கல்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - கம்பம் செல்வேந்திரன் - மு.தென்னவன் - தமிழரசி சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 29 -

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாளினை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் பொதுக் கூட்டங்கள், மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டு வருகிறது . இதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை சார் பில் மானாமதுரை தாலுகா இடைக்காட்டூரில் கலை ஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட் டம் மற்றும் நலத்திட்ட உத விகள் வழங்கும் விழா மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை அமைப்பாளரும், இடைக் காட்டூர் ஊராட்சி மன்ற தலைவருமான ஆ.மு. சண் முகநாதன் தலைமையில் மாவட்டத் தலைவர் டி.திரு நாவுக்கரசு, மாவட்ட துணைத் தலைவர் காரை. சுரேஷ்,மாவட்ட துணை அமைப்பாளர்கள் குரு. போஸ், பெ.ராஜேந்திரன், ஆபிரகாம், செல்வகுமார், பா.சுரேஷ்குமார், ஆர். ராதிகா ஆகியோர் முன்னி லையில் நடைபெற்றது.

முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி வரவேற்று பேசினார்.

இந்த பொதுக்கூட்டத் தில் மாவட்டக் கழக செய லாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன், மாநில தேர்தல் பணி குழுச் செய லாளரும் முன்னாள் எம். பியுமான கம்பம் பெ.செல் வேந் திரன், மாநில இலக் கிய அணி புரவலர் முன் னாள் அமைச்சர் மு. தென்னவன், திருமதி தமிழ ரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து, ஒன்றியக் குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணைத்த லைவர் முத்துசாமி, ஒன்றி யக் கழகச் செயலாளர்கள் துரை.ராஜாமணி ம.அண் ணாதுரை மானாமதுரை நகர் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் ஏ.ஆர். ஜெயமூர்த்தி, கு.ராசாங்கம், மானாமதுரை நகரமன்ற துணைத்தலைவர் சே.பால சுந்தரம், இளைஞர் அணி அழகுசுந்தரம், மாரிக்கண் ணன், தொண்டரணி மூர்த்தி, மகளிர் அணி சண் முகப்பிரியா, ஒன்றிய நிர் வாகிகள் சோனை முத்து, தனசேகரன், நாகராஜ்,ஈ. ஸ்வரி தர்மராஜ்,எஸ்.பால கிருஷ்ணன்,நீ. மணி, சீ. காளியப்பன், சமயமுத்து, மாரி, நாசர், சிக்கந்தர், பன் னீர்செல்வம், செல்வகுமார் ஆர். சுப்பிரமணி, சீமைச் சாமி, முத்துமணி, வெங் கட், ஒன்றிய துணைச் செய லாளர் முத்துக்குமார் புதூர் கண்ணன் மாவட்ட மாண வரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் உட் பட ஒன்றிய ஊராட்சிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .

நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்டோருக்கு நலத் திட்ட உதவிகளை அமைச் சர் கேஆர். பெரிய கருப்பன் மு .தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

இடைக்காட்டூர் கிளை செயலாளர் முகமது நாசர் நன்றி கூறினார். முன்னதாக அபி குழுவினரின் இன் னிசை நிகழ்ச்சி நடைபெற் றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட கலை இலக்கிய பேரவை பகுத்தறிவு மாவட்ட அமைப்பாளர் சண்முகநாதன் தலைமை யில் நிர்வாகிகள் செய்திருந் தார்கள்.

புதுவயல் சாக்கோட்டை கிழக்கு ஒன்றியக்கழகம் சார்பில் புதுவயலில் தலை வர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட் டம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய செயலாளர் சுப. சின்ன துரை தலைமையில் பேரூர் கழக செயலாளர்கள் பகு ருதீன்அலிபாய், செ.பிர மையா, அம்பாள்முகமது மீரா,சங்கீதா செல்லப்பன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தபொதுக்கூட்டத் தில் மாவட்டக் கழக செய லாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் மாநில தேர்தல் பணிக் குழு செய லாளரும் முன்னாள் எம். பி.யுமான கம்பம் பெ.செல் வேந்திரன், மாநில இலக் கிய அணி புரவலரும் முன் னாள் அமைச்சருமான மு.தென்னவன் தலைமை கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். முத்து துரை ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந் தில்குமார், மாவட்ட மாண வரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஒன்றிய நிர்வா கிகள் சத்யராஜா, வே.சேது கொக்கி குமார், பூக்குடி ஆறுமுகம், சுப்பையா, ரா. குணசேகரன், வீரப்பன், சின்னையா, கணேசன் சூர்யா அழகேசன், அயூப் கான், முருகேசன், வீ.ஆர். குணசேகரன், உமா மகேஸ் வரி, ஒன்றிய கவுன்சிலர் ரேவதிசின்னதுரை, மகளிர் அணி திவ்யாகண்ணன் , ஜெயந்தி பிரவீன், மணிகண் டன், கோபாலகிருஸ்ணன், திருப்பதி தாஸ், சின் னையா கணேசன், சூர்யா, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், புதூர் கண் ணன், மற்றும் ஒன்றிய ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சாக்கோட்டை கிழக்கு ஒன் றிய செயலாளர் சுப. சின் னத்துரை தலைமையில் ஒன் றிய பேரூர் கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள். பொதுக் கூட்டத்தில் 2000த்திற்கும் மேற்பட்ட மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ. அண்ணாதுரை
ஜூலை 29 (2014)

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தமிழ்நாட்டில்

பொறியியல் படிப்பு பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது!

சென்னை, ஜூலை 29-

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் சேருவதற்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைப்பு பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கு ஆன்லைன் வாயிலாக கலந்தாய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு விண்ணப்பித்த 2 லட்சத்து 29 ஆயிரத்து 175 மாணவர்களுக்கு பல சுற்றுகளாக கலந்தாய்வு நடத்தப்படுகிறது. சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு கடந்த 22ம் தேதி தொடங்கியது. இந்நிலையில் பொது பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று காலை 10 மணிக்கு தொடங்கியது.

பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு செப்டம்பர் 3ம் தேதி வரை நடைபெறுகிறது. பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு 3 கட்டங்களாக நடைபெறும். முதல் சுற்று பொது கலந்தாய்வு ஆகஸ்ட் 9ம் தேதி வரை நடத்தப்படுகிறது. 1,78,959 மாணவ, மாணவிகளுக்கான தர வரிசை பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. www.tneaonline.org என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்கலாம். மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதும் 430 பொறியியல் கல்லூரிகளில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 378 இடங்கள் நிரப்பப்படவுள்ளன.

தரவரிசையில் 22 ஆயிரத்து 761 இடம் வரையுள்ள மாணவர்கள் பொறியியல் பொதுப்பிரிவு கலந்தாய்வில் பங்கேற்கிறார்கள். முதல் சுற்றில் மாணவர்கள் நேற்று (ஜூலை 28) காலை 10 மணி முதல் ஜூலை 30 மாலை 5 மணி வரை விருப்ப கல்லூரிகள் மற்றும் விருப்ப பாடப்பிரிவுகளை தேர்வு செய்யலாம். வரும் 31ம் தேதி காலை 10 மணிக்குள் மாணவர்களின் விருப்ப தேர்வு அடிப்படையில் அவர்களுக்கான தற்காலிக இடம் ஒதுக்கப்படும் என பொறியியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கை குழு தெரிவித்துள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
மின்னணு - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு - உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோருதல்

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கிழக்கானும் பணிக்காக சென்னைக் குடிநீர் வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

வ. எண்.	ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண்	ஒப்பந்த முன் வைப்புத் தொகை	தகுதி	மின்னணு ஒப்பந்த சமர்ப்பிப்பு இறுதி தேதி	மின்னணு ஒப்பந்த திறக்கப்படும் தேதி
1	சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு இரண்டு ஆண்டுக்கான சமூக ஊடக மேலாண்மை. சமூக மறுமொழி மேலாண்மை, உள்ளடக்க உருவாக்கம் மற்றும் முன்னேற்ற ஆக்க முயற்சிக்காக புதிய தகவல் தொடர்பு நிறுவனத்தை தேர்வு செய்யும் பணி ஒம்/குநீர்/ செகுவா/3552/2023-24	ரூ.65,300/-	ஒப்பந்த ஆவணத்தில் உள்ளபடி	16.08.2023 அன்று பிற்பகல் 3.00 மணிவரை	17.08.2023 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு

2. ஒப்பந்த முன் வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனையாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன் வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்கேன் செய்யப்பட்ட நகலை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ - ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் 31.07.2023 வரை இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.

செ.ம.தொ.இ./4124/ஒப்பந்தப்புள்ளி/2023

மேற்பார்வை பொறியாளர், (ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு)

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"